# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
## பணியகத்தில் பதிவுசெய்து கொண்டு வெளிநாட்டில் தொழில்புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கல் - 2018

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்துகொண்டு தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்றுள்ள மற்றும் சென்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், 2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகைமைகளையுடைய மாணவ மாணவிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

### தகைமைகள்

### அ) 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

1) தாய்/தந்தை **2012.08.20 ஆம் திகதியலிருந்து 2017.08.20** ஆந் திகதி வரையான காலத்திற்குள் **பணியகத்தில் பதிவுசெய்திருத்தல்.**
2) 2017 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளியில் சித்தியடைந்திருத்தல்.

### ஆ) க.பொ.த (சா/த) புலமைப்பரிசில்

1) தாய்/தந்தை **2011.12.06 ஆம் திகதியிலிருந்து 2016.12.06** ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் **பணியகத்தில் பதிவுசெய்திருத்தல்.**
2) 2016 ஆம் ஆண்டுக.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் உள்ளிட்ட 6 பாடங்களுடன் 3 திறமைச் சித்தியுடன் சித்தியடைந்து உயர் தரம் கற்பவராக இருத்தல்.

### இ) உயர்கல்வி புலமைப்பரிசில்

1) தாய்/தந்தை **2011.08.02 ஆந் திகதியிலிருந்து 2016.08.02** ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் **பணியகத்தில் பதிவுசெய்திருத்தல்.**
2) 2016 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது அரச பல்கழைக்கழகம் ஒன்றில் முழுநேர உள்வாரி பட்டப்படிப்பு பாடநெறி முதல் வருடத்தில் கற்பவராக இருத்தல்.

மேற்படி தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்கள் இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்த செய்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் **பதிவுத் தபால் மூலம் 2018.04.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னா்** கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பிவைக்கும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தான் விண்ணப்பிக்கும் புலமைப்பரிசில் வகையை மாத்திரம் **"புலமைப்பரிசில் வழங்கல் -ஆண்டு-5 - 2018"** என்றவாறு குறிப்பிடுதல் வேண்டும்.

1. மாணவன்/மாணவியின் பிறப்பத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (அதிபரினாலோ/பதிவாளரினாலோ இறப்பர் முத்திரையிட்டு உண்மை பிரதி என உறுதிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்)
2. மாணவன்/மாணவியின் கல்விப் பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதி. (அதிபரினாலோ/பதிவாளரினாலோ இறப்பர் முத்திரையிட்டு உண்மை பிரதி என உறுதிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்)
3. தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படம் பொறிக்கப்பட்டுள்ள பக்கத்தின் பிரதி.
4. புலமைப்பரிசில் விண்ணப்பதாரரின் அல்லது வெளிநாடு சென்றுள்ள (தாயின்/தந்தையின் ) பெயர்களில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அவைகளை தெளிவுபடுத்தி சமாதானநீதவான் ஒருவரினால் வழங்கப்படும் சத்தியக்கடதாசி.
5. மாணவனின்/மாணவியின் தேசிய அடையாள அட்டையின் பிரதி (க.பொ.த (சா.த) மற்றும் உயர்தரம் கற்பவர்களுக்குமட்டும்)
6. பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பாடநெறிபற்றியும் அதன் கால எல்லை மற்றும் முதலாம் வருடத்தில் கல்வி பயில்கின்றார் என்று பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் (மூலப் பிரதி கட்டாயம்)

### மிக முக்கியமானது

- **விண்ணப்பப்பத்திரத்தின் 3 ஆம் பகுதி அதிபரினால் /பிரிவின் தலைவரினால் /நிறுவன உயரதிகாரியினால் /பதிவாளரினால் பூரணப்படுத்தி இறப்பர் முத்திரையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்**
- **ஒரு புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு ஒரு தடவை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.**
- **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.04.30 ஆகும்.**

**மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யாத அல்லது உரிய ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படாத அல்லது பூரணமாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதமாகிக் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதோடு மீண்டும் அவ்விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய விலாசம் :- முகாமையாளர் (நலன்புரி)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
இல.234,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்லை.

தொலைபேசி இல:- 011-2864117

www.slbfe.lkஎன்றபணியகத்தின் இணையத்தளம் ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்